TAMILTH Coimbatore 1 Regional_02 D ARUL SELVAN 223513 HT187295

சின்ன சின்னதாய்

கல்லூரி ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

■ கோவை

யுஜிசி வரைவு அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் பல்வேறு கட்ட போராட்டங்களை முன்னெடுத்துள்ளது. அதன் ஒரு பகுதியாக, கோவை அரசு கலைக்கல்லூரியின் நுழைவுவாயில் முன்பு கோரிக்கை முழக்க போராட்டம் நேற்று நடைபெற்றது. ஆசிரியர் கழகத்தின் செயலாளர் ஜெயக்குமார் தலைமை வகித்தார். மத்திய அரசை கண்டித்தும், யுஜிசி வரைவு அறிக்கையை திரும்ப பெற வலியுறுத்தியும் முழக்கமிட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் மண்டல தலைவர் ராபர்ட், செயலர் ராஜகோபால், கிளை தலைவர் பாலமுருகன், துணைத் தலைவர் ராஜேஷ், பொருளாளர் இளங்கோ, சுதா மகேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

● சாலை பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு, கோவை மாநகர போக்குவரத்து காவல்துறை சார்பில், லட்சுமி மில் சந்திப்பில் நேற்று நடந்த நிகழ்வில், வாகன ஓட்டிகளுக்கு இலவசமாக தலைக்கவசம் வழங்கப்பட்டது. மாநகர காவல் ஆணையர் சரவண சுந்தர் பங்கேற்று பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் தலைக்கவசத்தை வழங்கினார். படம்: ஜெ.மனோகரன்

'பெண் குழந்தைகளை கட்டாயம் உயர்கல்வி படிக்க வைக்க வேண்டும்'

■ பொள்ளாச்சி

குடியரசு தின விழாவையொட்டி, பொள்ளாச்சி வடக்கு ஊராட்சிக்கு உட்பட்ட ஒக்கிலிப்பாளையம் கிராமத்தில் நடந்த கிராமசபை கூட்டத்தில், சிறப்பு பார்வையாளராக கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி, சார் ஆட்சியர் கேத்தரின் சரண்யா உள்ளிட்டோர் பங்கேற்றனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி பேசும்போது, "சாலை, வடிகால், பொதுகுடிநீர் குழாய் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்த கோரிக்கைகளை பொதுமக்கள் இச்சபையில் தெரிவிக்கலாம். நமது மாவட்டத்தில் படித்த அனைத்து இளைஞர்களுக்கும் அவர்களின் திறமை, படிப்புக்கு ஏற்ற வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன. தமிழகத்தில் அதிக அளவிலான பெண்கள் வேலைக்கு செல்கின்றனர். பெண் குழந்தைகளின் படிப்பை பாதியில் நிறுத்தாமல், கட்டாயம் உயர்கல்வி வரை பெற்றோர் படிக்க வைக்க வேண்டும். தங்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கும், தன்னம்பிக்கைக்கும் பெண்கள் வேலைக்கு செல்லவேண்டியது அவசியமாகிறது" என்றார்.

பிரேத பரிசோதனை அறிக்கையில் இளைஞரின் உடலில் அசாதாரண காயம்

தோட்டா பாய்ந்ததை மறைத்து யானை தாக்கியதாக நாடகம்

கூடலூர் அருகே 13 பேர் கைது; 3 நாட்டு துப்பாக்கிகள், 2 கார் பறிமுதல்

■ கூடலூர்

கூடலூர் அருகே யானை தாக்கி இளைஞர் உயிரிழந்ததாக நாடக மாடியுள்ள சம்பவம், பிரேத பரிசோதனை அறிக்கையின் மூலமாக அம்பலமாகியுள்ளது. மேலும் துப்பாக்கி தோட்டா பாய்ந்து அவர் உயிரிழந்ததும், தோட்டாவை உடன் சென்றவர்களே அகற்றியதும் போலீஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகே தேவர்சோலை பகுதிக் குட்பட்ட 3-வதுடிவிஷன்பகுதியில், கடந்த 25-ம்தேதிநள்ளிரவுயானை தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துவிட்டதாக வனத்துறையினருக்கு சிலர் தகவல் அளித்துள்ளனர். இதையடுத்து, கூடலூர் அரசு மருத்துவமனைக்கு இளைஞரின் உடல் கொண்டு வரப்பட்ட நிலையில், யானை தாக்கியது தொடர்பாக வனத்துறையினர் முதல்கட்ட விசாரணையைத் தொடங்கினர். சம்பவம் நடைபெற்ற இடம், இளைஞரின்

● ஜம்ஷீர்

உடலில் ஏற்பட்ட காயம் ஆகியவற்றை ஒப்பிடுகையில், யானை தாக்குதலுக்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. இதனால், சந்தேகமடைந்த வனத்துறையினர் தீவிர விசாரணை நடத்தினர். இதில், மர்மமான முறையில் ஏற்பட்ட உயிரிழப்பை, யானைமீது பழி போட்டு நாடகமாடுவதை கண்டறிந்தனர். உடனடியாக போலீஸாருக்கு தகவல் அளித்துள்ளனர்.

இதையடுத்து, சந்தேக மரணம் என வழக்கு பதிந்து போலீஸார் விசாரித்து வந்தனர். மேலும், கூடலூர் அரசு மருத்துவமனையில் இருந்த இளைஞரின் உடல், உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு உடற்கூறாய்வு செய்யப்பட்டது. இதில், உயிரிழந்த இளைஞரின் அடிவயிற்று பகுதியில் ஆழமான காயம் இருப்பதை கண்டு விசாரணையை தீவிரப்படுத்தினர்.

இதில், வன விலங்கு வேட்டைக்கு சென்றபோது துப்பாக்கி தோட்டா பாய்ந்து அவர் உயிரிழந்ததும், அதை மறைக்கும் நோக்கில் காட்டு யானை தாக்கி இறந்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளனர். மேலும், இளைஞர் உடலில் பாய்ந்த தோட்டாவை வேட்டைக்கு உடன் சென்றவர்களே அகற்றியதும் விசாரணையில் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக ஜம்ஷீருடன் வேட்டைக்கு சென்ற நௌஷாத், ஜாபர் அலி, சதீஷ், ஐதர் அலி உட்பட 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து, 3 நாட்டுத் துப்பாக்கிகள், 2 கார்கள் உள்ளிட்டவற்றை போலீஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இதுதொடர்பாக போலீஸார் கூறும்போது, "ஜம்ஷீர் மற்றும் அவரின் நண்பர்கள் சிலர் நாட்டுத் துப்பாக்கிகளுடன் வன விலங்கை வேட்டையாட முயன்றபோது தோட்டா பாய்ந்து அவர் உயிரிழந்துள்ளார். இது, இளைஞரின் அடிவயிற்றில் ஏற்பட்ட அசாதாரண காயம் மூலமாக தெரியவந்தது. இதுதொடர்பாக 13 பேரை கைது செய்து விசாரிக்கிறோம்" என்றனர்.

முன்னதாக தகவல் அறிந்து, காங்கிரஸ் கட்சி மாநிலத் தலைவர் கு.செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில், "கூடலூரில் மர்மமான முறையில் உயிரிழந்த ஜம்ஷீர், இளைஞர் காங்கிரஸில் பேரூராட்சி தலைவராக செயலாற்றியவர். அவரது மரணத்தின் உண்மை தன்மையை கண்டறிய, முறையான மற்றும் விரைவான விசாரணையை மேற்கொள்ள வேண்டும். உண்மை குற்றவாளிகளுக்கு உரிய தண்டனையை போலீஸார் பெற்றுத்தர வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனைமலையில் ரூ.30.18 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

■ ஆனைமலை

ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நேற்று கொப்பரை ஏலம் நடைபெற்றது.

இதுகுறித்து விற்பனைக்கூட கண்காணிப்பாளர் செந்தில் முருகன் கூறும்போது, "ஆனைமலை சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், 524 மூட்டைகள் கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். வியாபாரிகள் முன்னிலையில் அவற்றை தரம் பிரித்து ஏலமிட்டதில், முதல் தர கொப்பரை 278 மூட்டைகள், குவிண்டாலுக்கு குறைந்தபட்சம் ரூ.14,000-க்கும், அதிகபட்சம் ரூ.14,616-க்கும் விற்பனையானது. 2-ம் தர கொப்பரை 246 மூட்டைகள், குவிண்டாலுக்கு குறைந்தபட்சம் ரூ.8,015-க்கும், அதிகபட்சம் ரூ.12,052-க்கும் விற்பனையானது. ஏலத்தில் 10 வியாபாரிகள், 96 விவசாயிகள் பங்கேற்றனர். மொத்தம் 235.80 குவிண்டால் கொப்பரை ரூ.30.18 லட்சத்துக்கு ஏலமிடப்பட்டது" என்றார்.

எப்பநாடு பீர்முக்கு ஈஸ்வரன் கோயில் திருவிழா பாரம்பரிய உடையுடன் படுகரின மக்கள் நடனம்

■ உதகை

உதகை அருகே மலை கோயிலில் நடைபெற்ற படுகரின மக்களின் திருவிழாவில், பாரம்பரிய உடையுடன் நடனமாடி கொண்டாடினர்.

நீலகிரி மாவட்டத்திலுள்ள 350-க்கும் மேற்பட்ட கிராமங்களில் படுகர் சமுதாய மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தேயிலை விவசாயம், மலை காய்கறிகள் சாகுபடி உள்ளிட்ட பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தங்களது கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை இன்றளவும் பின்பற்றி வருகின்றனர். ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் முதல் மார்ச் வரை பல்வேறு திருவிழாக்களை கொண்டாடி வருகின்றனர். இவ்விழாவில் கலந்து கொள்ள வெளிநாடுகளில் இருந்தும் படுகரின மக்கள் சொந்த ஊருக்கு வந்துவிடுவார்கள்.

இந்நிலையில், உதகை அருகே எப்பநாடு கிராமத்திலுள்ள பீர்முக்கு ஈஸ்வரன் கோயிலில் நேற்று முன்தினம் திருவிழா நடைபெற்றது. ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே திறக்

● உதகை அருகே மலை கோயிலில் நடைபெற்ற படுகரின மக்களின் திருவிழாவில் பாரம்பரிய உடையணிந்து நடனமாடி கொண்டாடிய மக்கள்.

கப்பட்டு திருவிழா நடத்தப்படும் இந்த கோயிலுக்கு, எப்பநாடு கிராமத்தில் இருந்து இருளர் பழங்குடியினரின் மங்கல இசையுடன் வண்ண குடை ஏந்தி அய்யனை ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

எப்பநாடு, கெங்கமுடி, தொறை ஹட்டி, தூனேரி உள்ளிட்ட சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள், மலை கோயிலில் கூடி வரிசையில் நின்று ஈஸ்வரனை நேற்று தரிசித்தனர். பாரம்பரிய உடையணிந்து படுகர் சமுதாய மக்கள் ஆடிய கலாச்சார நடனம், காண்போரை வெகுவாக கவர்ந்தது. ஆயிரத்துக்கும் அதிகமான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். விழாவில், கலந்துகொண்டவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

வியர்க்குதே

தாராபுரம் துணை மின் நிலையத்துக்கு உட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் மாதாந்திர பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளதால் நாளை (ஜன.30) காலை 9 மணி முதல் பகல் 2 மணி வரை மின் விநியோகம் இருக்காது என மின்வாரியம் தெரிவித்துள்ளது.

தாராபுரம் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகள், வீராச்சிமங்கலம், நஞ்சியாபுரம், வரப்பாளையம், மடத்துப்பாளையம், வண்ணாபட்டி, சின்னக்காம்பாளையம், உப்பாறு, அம்மாபட்டி, பஞ்சப்பட்டி, சின்னப்புத்தூர், கோவிந்தாபுரம், செட்டிப்பாளையம், உ.ஆலம்பாளையம், கொண்டரசம்பாளையம், அலங்கியம், குள்ளக்காளிப்பாளையம், குள்ளப்பாளையம், கண்ணங்கோவில் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகள், மதுக்கம்பாளையம் பிற பகுதிகள்.

உதகையில் தனியாருக்கு தாரை வார்க்க இருப்பதாக கூறப்பட்ட

அரசு பள்ளி மைதானத்தில் கோட்டாட்சியர் ஆய்வு

■ உதகை

உதகையில் தனியாருக்கு தாரை வார்க்க இருப்பதாக கூறப்பட்ட அரசு பள்ளி மைதானத்தில் கோட்டாட்சியர் தலைமையிலான குழுவினர் நேற்று ஆய்வு மேற்கொண்டனர்.

நீலகிரி மாவட்டம் உதகை ஏடிசி பகுதியில் சுமார் 2.5 ஏக்கர் பரப்பில் அரசுக்கு சொந்தமான காந்தி விளையாட்டு மைதானம் உள்ளது. இந்த மைதானத்தை உதகை அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களும், அரசு உதவிபெறும் தனியார் பள்ளி மாணவர்களும் பயன்படுத்தி வந்தனர். ஒரு கட்டத்தில் மைதான பராமரிப்பு பணிகளை தனியார் பள்ளி நிர்வாகம் மேற்கொள்ள திட்டமிட்டது. மேலும், அந்த மைதானத்தை பயன்படுத்த அனுமதிக்க வலியுறுத்தி, தனியார் பள்ளி சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் கடந்த 2021-ம் ஆண்டு வழக்கு தொடரப்பட்டது. இதை விசாரித்த உயர்நீதிமன்றம், அரசு பள்ளிக்கு சொந்தமான மைதானத்தை தனியார் பள்ளி நிர்வாகத்துக்கு எவ்வாறு வழங்க முடியும் என்று கேள்வி எழுப்பி, அரசு பள்ளி மாணவர்கள் மட்டும் பயன்படுத்த உத்தரவிட்டது. மேலும், அந்த மைதானத்தை சரியாக பராமரிக்கவும் அறிவுறுத்தியது. இதைத்தொடர்ந்து, நுழைவுவாயில் கதவுகள் சரி செய்யப்பட்டன. இந்நிலையில், இந்த மைதானத்தை மீண்டும் தனியார் பள்ளி பயன்படுத்த முயற்சி செய்து வருவதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து சமூக ஆர்வலர்கள் கூறும்போது, "மிகவும் பாரம்பரியம் வாய்ந்த இந்த மைதானத்துக்கு மகாத்மா காந்தி வந்து பேசினார் என்பதால், காந்தி மைதானம் என பெயரிடப்பட்டது. பள்ளி கல்வித் துறை கட்டுப்பாட்டில் இந்த மைதானத்தை வைத்து, அரசு பள்ளி மாணவர்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். தனியார் பள்ளிக்கு வழங்கக்கூடாது" என்றனர்.

இதற்கிடையே, உதகை கோட்டாட்சியர் சதீஷ்குமார், மாவட்ட முதன்மைகல்வி அலுவலர் நந்தகுமார், நகராட்சி அதிகாரிகள், நில அளவைத் துறை அலுவலர்கள் உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர், சம்பந்தப்பட்ட மைதானத்தில் நேற்று ஆய்வு நடத்தினர்.

இதுகுறித்து உதகை கோட்டாட்சியர் சதீஷ்குமார் கூறும்போது, "சம்பந்தப்பட்ட அரசு பள்ளி மைதானத்தில் ஆய்வு நடத்தப்பட்டது. ஆய்வுக்கு பிறகு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு முடிவு செய்யப்படும்" என்றார்.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு அனுப்பலாம். மின்னஞ்சல் முகவரி: repkovai@hindutamil.co.in

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

I, Karthick A V S/O R. Viswanathan Residing At 141/123 F, Maariamman Kovil Street, Aathupalayam Road Anuparpalayam, Tiruppur, Po: 15 Velampalayam, Dist: Tiruppur, Tamil Nadu-641652, have Changed My Name To Karthick Viswanathan For All Future Purposes

தமிழ்நாடு அரசு

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல் மாவட்டம்

ஒருங்கிணைக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதித் திட்டம் (SCPAR) - 2024 -2025

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.36/2025/அ8 நாள் : 27.01.2025

மின் ஒப்பந்தப்புள்ளி

1 முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை பார்வையிடவும்.

2 நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதித் திட்டத்தின் கீழ் SCPAR 2024-2025 நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு வட்டாரம் மொளசி ஊராட்சி முனியப்பம்பாளையம் குக்கிராமத்தில் புதிய எரிவாயு தகனமேடை கட்டுதல் பணிக்கு இ-மின் ஒப்பந்தப்புள்ளி (இரு உறைகள்) மூலம் வரவேற்கப்படுகிறது.

3 ஒப்பந்தப்புள்ளிக்கான ஆவணத்தினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் 29.01.2025 முதல் 12.02.2025 வரையிலான காலத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

i) மின் ஒப்பந்த ஆவணம் பதிவிறக்கம் மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 12.02.2025 - பிற்பகல் 03.00 மணி வரை

ii) மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 12.02.2025 - பிற்பகல் 04.00 மணி முதல்

செ.ம.தொ.இ/328/ஒப்பந்தப்புள்ளி/2025

திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல்.

Repco Home Finance

ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

திருப்பூர் கிளை: எண்.18, ஹரினா சென்டர், முதல் தளம், நேரு தெரு, காதர்பேட்டை, திருப்பூர்-641601

இ - ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்தினை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்தினை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI ACT) -இன் கீழ் ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் கம்பெனியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை விற்பனை செய்தல்

கடன்தாரர்: Mr.C.சரவணன், S/o. Mr.சின்னதம்பி, **சக-கடன்தாரர்: Mrs.S.சுதா,** W/o.Mr.C.சரவணன், **ஜாமீன்தாரர்: Mr.S.பாலமுருகன்,** S/o.Mr.சிவலிங்கம் ஆகியோர் ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், **திருப்பூர் கிளையில்** கீழ்க்கண்ட அசையா சொத்துக்களை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளனர். நிறுவனமானது கடன் கணக்கு எண்.**1141871004378**-ன் கீழ் **11.08.2022** அன்றுள்ளபடி கடன் தொகையான ₹ **12,76,999/-** மற்றும் வட்டி, இதர செலவுகளையும் சேர்த்து அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு SARFAESI-சட்டம் 2002 பிரிவு 13(2)-ன் கீழ் **12.08.2022** அன்று மேற்கண்டவர்களுக்கு கோரிக்கை அறிவிப்பு அனுப்பியது.

கடன்தாரர் & சக-கடன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்டுள்ள நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தத் தவறியதால் நிறுவனமானது கீழே குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்களை சட்டம் பிரிவு 13(4)-ன் கீழ் **04.01.2023** அன்று சுவாதீனம் எடுத்துக்கொண்டுள்ளது.

இதனை தொடர்ந்து, சொத்தை ஈடாக பெற்றிருக்கும் கடன் கொடுத்தவரான (Secured Creditor) ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனமானது கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு கீழே விவரிக்கப்பட்டுள்ள அடமான சொத்துக்களை **"எங்கே அமைந்துள்ளதோ அங்கேயே அப்படியே" என்ற நிலையிலும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற வகையிலும்** ("as is where is" & "as is what is" condition) SARFAESI ACT 2002 பிரிவு 13(4)-ன் படியும் சொத்து மீதான கடனீட்டு உரிமை (அமலாக்கம்) விதிமுறைகள், 2002, விதி எண் 8 & 9-ன் படியும் விற்பனை செய்ய முடிவெடுத்து கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்படுகிறது. **கடன்தாரர் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை கடன் கணக்கு எண்.1141871004378-ன் கீழ் 25.01.2025 அன்றுள்ளபடி ₹ 19,32,187/-** ஆகும்.

இ-ஏல தேதி & நேரம்: 14.02.2025 காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 வரை விற்பனை முடியும் வரை தலா 5 நிமிடங்கள் கொண்ட கால வரையறை நீட்டிப்புகள் அனுமதிக்கப்படும்

இ-டெண்டரை சமர்பிக்கும் கடைசி நாள் & நேரம்: 13.02.2025 மாலை 4.00 மணிக்கு

அசையா சொத்து விபரம்

திருப்பூர் பதிவு மாவட்டம், அவினாசி சார் பதிவு மாவட்டம் மற்றும் எட்டிவேரம்பாளைம் கிராம பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட SF எண். 100, **எட்டிவேரம் கிராமம், எட்டிவேரம் தாலுகா** என்னும் முகவரியில் புஞ்சை ஹெக்டேர் 3.70.0, புஞ்சை ஏக்கர் 9.14, தரம் Rs.10.31 இதில் மேற்கு பக்கம் ஏக்கர் 4.50 (புதிய SF எண்.100/2) நிலம் மற்றும் கட்டடம், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: நாராயணசாமி கவுண்டர் சொத்துக்கு வடக்கு, கிழக்கு மேற்கு ரோடுக்கு தெற்கு, அதே பீல்டிலுள்ள தெற்கு வடக்கு வண்டிப்பாதைக்கு கிழக்கு, அதே பீல்டிலுள்ள சாமியப்பன் சொத்து. இதன் மத்தியில் புஞ்சை ஏக்கர் 4.50 வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு கோயம்புத்தூர் மண்டல நகர மற்றும் ஊரமைப்பு துணை இயக்குனரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட DTCP எண்.227/2018 மற்றும் 18.05.2018 எட்டிவேரம்பாளையம் கிராம பஞ்சாயத்து சிறப்பு அலுவலரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட Na.Ka.No.458/2018 படி R.P.S. நகர் பெயரிடப்பட்டு அதில் கிழக்கு பக்கத்திலுள்ள மனை எண்.61-ன் எல்லைகள்: 23 அடி கிழக்கு மேற்கு லேஅவுட் ரோடுக்கு வடக்கு, மனை எண்.58-க்கு தெற்கு, மனை எண்.61-ன் மேற்கு பகுதிக்கு கிழக்கு, மனை எண்.60-க்கு மேற்கு இதன் மத்தியில் கிழக்கு மேற்காக இருப்பக்கமும் 20 அடி தெற்கு வடக்காக இருபக்கமும் 40 அடி ஆகமொத்தம் **800 சதுர அடி (74.34 சதுர மீட்டர்) வீட்டு மனை முழுவதும், அதிலுள்ள புதிதாக கட்டப்பட்டுள்ள RCC வீடு,** அதனுடன் வழக்கமான வழிப்பாதை உரிமைகள், சொத்திற்கு செல்லும் சாலைகளில் வாகனங்கள் செல்லும் மற்றும் நடந்து செல்லும் உரிமை. மேற்குறிப்பிட்டுள்ள சொத்தானது சப்டிவிஷன் SF எண். 100/2A1A, எட்டிவேரம் கிராமத்தில் உள்ளது.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ **17,31,000/-** EMD (குறைந்தபட்ச கேட்புவிலையில் 10%) ₹ **1,73,100/-** குறைந்தபட்ச ஏல உயர்வுதொகை ₹ **15,000/-**

இ-ஏல நடைமுறைக்கு தொடர்புகொள்ள வேண்டிய நபர்: M/s. C1 India Pvt. Ltd, Mr.பிரபாகரன் - 74182 81709.

சொத்துக்களை பார்வையிட, ஏல விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஏலத்தில் கலந்து கொள்ளும் நபர்கள், கிளை மேலாளர், ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், திருப்பூர் கிளை தொடர்பு எண்கள். Ph: 0421 2239202 & 94443 94976 **என்ற எண்ணில் அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.**

தேதி: 27.01.2025

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் (ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. கிளை அலுவலகம் : எண்.117, சாஸ்திரி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)-ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள முதல் சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **மின் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	27.01.2025-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	48059440000122	1) M/s. சாதிக் பாட்சா, உரிமையாளர் Sadiq Batcha Autos, மேலும் : திரு. சாதிக் பாட்சா, த/பெ. கதா பாட்சா, 2) திருமதி. மதினா, க/பெ. சாதிக் பாட்சா	11.11.2024	21.01.2025	ரூ.1,26,169.07 (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தி ஆறாயிரத்து நூற்றி அறுபத்தி ஒன்பது மற்றும் பைசா ஏழு மட்டும்)	17.02.2025 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.3,90,400/- (ரூபாய் மூன்று இலட்சத்து தொண்ணூறாயிரத்து நானூறு மட்டும்)	ரூ.39,100/- (ரூபாய் முப்பத்தி ஒன்பதாயிரத்து நூறு மட்டும்)	03.03.2025 @ 03.00 PM	01.03.2025, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.117, சாஸ்திரி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009.

பாதுகாப்பு சொத்துக்கள் விவரம் : கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், இணை-2 சார்-பதிவு மாவட்டம், பேரூர் தாலுகா, குனியமுத்தூர் கிராமம், எஸ்.எப்.எண்.18/4, இதின் சைட் எண்.197, **எல்லைகள்:** வடக்கு : கிழக்கு-மேற்கு சாலை, **மேற்கு :** காலி நிலம், **தெற்கு :** சைட் எண்.196, **கிழக்கு :** வடக்கு-தெற்கு பாதை. இதன் மத்திய கிழக்கு-மேற்கு இருபக்கமும் : 8.5 மீட்டர் அல்லது 28 அடி, வடக்கு-தெற்கு இருபக்கமும் : 6.2 மீட்டர் அல்லது 20 1/4 அடி. அளவுகள் 52.7 சதுர மீட்டர் அல்லது 567 சதுர அடி அல்லது 1 சென்ட் 131.4 சதுர அடி பரப்பு நிலம் அத்துடன் அதில் கட்டப்பட்ட லைட்டு வீட்டு கட்டிடம் மற்றும் அதன் பாதுகாப்பு வைப்புகள், கதவு எண்.6, வார்டு 92, வரி அசெஸ்மெண்ட் எண். 923765 மற்றும் E.B.S.C.No.269-002-2170 மற்றும் மேற்கூறப்பட்ட சொ